RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22362

OPEN ACCESS

# பழங்குடி பாரதியின் கவிதைகளில் வாழ்வியல்

தே. மேரி மெல்பா ரோஸ் [அ, *], சி. கணேஷ் [அ]

[அ] தமிழ் ஆய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துடன் இணைவுப் பெற்றது) நெய்யூர், தமிழ்நாடு, இந்தியா

# Life in the Poems of Tribal Bharathi

**D. Mary Melba Rose [a, *], S. Ganesh [a]**

[a] Department of Tamil, Lekshmipuram Arts and Science College, (Affliated to Manonmaniam Sundaranar University) Neyyoor, Tamil Nadu, India

* Corresponding Author:
melba94453441 49@gmail.com

Received: 11-03-2022
Revised: 30-06-2022
Accepted: 08-07-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Suresh swamy, who writes under the pen name Pazhangudi Bharathi, belongs to the Kani tribal community. He was given the name Suryan at birth. His grandfather gave him the name Kattu Raja. He is the on ly one who writes poetry in the language of the tribal people. He handles the customs of the Kani people in Kanyakumari district in writing. It can be said that the written literature of the Kani. People begins with him. Pazhangudi Bharathi attempts to create literature similar to folk literature. His poems express the lifestyle aspects related to the forest and its events. The poems of Pazhangudi Bharathi, which attempt to establish the identity of the Kani people are authentic. In the early days, the songs of the Kani people were in the form of music. For example, one can mention the "saatruppaadal" which praises God. The meaning of these songs, which are played with a musical instrument called "Kokkarai" is not very clear but it is surprising and noteworthy that they contain the ancient Tamil of the primitive tribes. In the poems of Pazhangudi Bharathi, the wilderness is featured. His writing, which brings the ancient tribal people into the contemporary era through poetry is a notable work among the creations of the new generation of poets of the Kanyakumari region.

**Keywords:** Land race, Wild king, Agriculture, Arthritis, Tribe.

## முன்னுரை

"பழங்குடி பாரதியின் கவிதைகளில் வாழ்வியல்" என்னும் தலைப்பில் ஆதிவாசி சமூகமான காணி பழங்குடி இனமக்களின் வாழ்வு முறைகள் பேசப்படுகின்றன. குமரி மாவட்டத்திலும் பேச்சிப்பாறை பகுதியில் காணி இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்களின் அன்றாட வாழ்வியல் நிகழ்வுகள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. காடு சம்பந்தப்பட்ட வனக்களத்தின் நிகழ்வுகள் இக்கட்டுரையில் பேசப்படுகின்றன.

## காட்டு ராஜாவின் காட்டுப்புறக் கவிதைகள்

பழங்குடி பாரதியின் கவிதை உலகம் முழுக்க முழுக்க காடு சார்ந்ததாக அமைந்திருந்தது. காட்டுப்புற மக்கள் கவிதைகளாக மலர்ந்த அதன் இருப்பு முழுவதும் இயற்கை, காதல், தொழில்கள், சமூகம், உழைப்பு, காட்டுக்காவல் என விரிகிறது.

மேற்கண்டவை ஆதிவாசிகளின் வாழ்வியல் அம்சங்களாக பழங்குடி பாரதியின் கவிதைகளில் காணக்கிடைக்கின்றன. இவரது கவிதைகள் மொழியாலும், சொற்களின் சேர்க்கையாலும் வித்தியாசப்பட்டு தனித்துவம் பெற்று திகழ்கிறது.

## இயற்கை

இயற்கையை உண்மையிலேயே நேசிப்பதும், பாதுகாப்பதும் ஆதிவாசிகள் என்னும் காட்டுப்புற மக்கள் ஆவர். ஆனால் பழங்குடி பாரதியின் 'நெயலி' என்ற கவிதையில் நாட்டு மனிதர்கள் இயற்கையை நேசிப்பவர்களாகவும், காட்டு மனிதர்கள் நாசம் செய்கிறவர்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள்.

'நெயலி' என்பதற்கு நிழல் என்று பொருள். இதுவொரு இயற்கைப் பொருளையும் தாண்டி தத்துவப் பொருளைத் தருகிறது.

## கவிதை

"நிக்கள நெயலி

எக்கு நிக்காம்

எக்கள நெயலி

யாரு நிக்கும்?"1

என்பதில் நிக்கள, எக்கள என்பதன் பொருள் உனது, எனது என்பதாகும். எக்கு என்பது 'எனது' என்பதாகும். இது சங்க இலக்கியத்தில் வரும் 'எற்கு' என்பதன் சிதைந்த வடிவம்.

நாட்டிலிருந்து காட்டில் வந்து மரம் ஒன்றைத் திருடிச் சென்றான் நகரவாசி ஒருவன். வெட்டப்பட்ட மரத்தின் மூட்டைப் பார்த்து உனது நிழலில் நான் நிற்கலாம். எனது நிழலில் யார் நிற்பார்கள்? என்று கேட்பதுதான் கவிதை. "நெக்கப்பாட்டு" என்ற கவிதை காதலைச் சொல்வது. நெக்கம் என்ற காணிச்சொல்லுக்கு காதல் என்பது பொருள். 'குஞ்ஞும்ம' என்ற பெண் நிற்கும் அழகை.

"மிற்றத்தி நிக்கண நாரத்தி மூட்டியலு

ஒற்றக்கி நிக்கிண குஞ்ஞும்மே

நேரம் வெழும்பிலு நிக்கள காத்து நாய்ங்

ஒற்றக்கி நிக்கிக்கிணி குஞ்ஞும்மே"2

என்ற வரிகளில் கூறும்போது பின்னணியில் இயற்கையாக நாரந்தி மரம் நிற்பதாகக் சுட்டப்படுகிறது. பழங்குடி பாரதியின் கவிதைகளில் இயற்கை பின்னணியாகவும் அழிக்கப்படுவதற்கு எதிராகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

## காதல்

ஆதி சமூகத்தில் தான் முதன்முதலாகக் காதல் உருவாகி இருக்க வேண்டும். மனிதன் கடந்து வந்த பாதையின் முதல் தொடக்கம் அது. பழங்குடி பாரதியின் கவிதையில் காதலை வெளிப்படுத்தும் ஆண் ஒருவன் பெண்ணிடம்.

"ஆணாங்கம் ஆயா

பெண்ணுங்களோடொரு

செறிய மயக்கமும் செறிய கிருக்கமும்

செறிய தயக்கமும் இருக்கும் - அது

அம்மாச்சயிங் மகளோடு

ஒருவாடு ஒருவாடு கூடி கூடி”3

என்கிறான். காணிக்காரர் சமூகத்தில் பெண்ணுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை இக்கவிதையின் வாயிலாக அறியலாம். மாமன் மகனோடு கொண்ட காதலை வெளிப்படுத்தும் உறவுத் தன்மை கூறப்படுவதால் ஆதிவாசி மக்களின் திருமணம் பெரும்பாலும் நெருங்கிய உறவுகளுக்குள் அமையும் என்பதை இக்கவிதை மூலம் அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்கள் மிகத்துல்லியமாகக் காதலை வெளிப்படுத்துவது போல, அதன் இம்சையைத் தனது கவிதைகளில் வெளிப்படுத்துகிறார் பழங்குடி பாரதி.

"பின்ன ஒறங்கயிம் பற்றாது

தின்னயிம் பற்றாது

வேலக்கும் போவாது

வேட்டக்கும் போவாது

சோப்பயும் சோம்பலும்

நெக்கமும் ஏக்கமும்

மெனசிலு மோகமும் கொண்டு நடக்கிணி

நீக்கள மிற்றத்தி நின்ன காணுக்கு

காலத்த தொட்டு காவலு கெடக்கினி”4

என்ற வரிகளில் உறங்கவும் முடியாமல், வேட்டைத் தொழிலுக்கும் போகாமல் மோகமுமாகத் திரியும் காணிக்கார இளைஞன் ஒருவனின் காதல் வயப்பட்ட நெஞ்சம் எடுத்துச் சொல்லப்படுகிறது.

அவன் வீட்டு முற்றத்தில் நின்று காண்பதற்காகவே காலை முதல் காவல் கிடக்கும் அனுபவத்தைக் கூறும்போது கனவு வாழ்க்கை காணிக்காரர் சமூகத்தில் வெளிப்படையானது என்று அறியலாம்.

## தொழில்கள்

காணிக்காரர் செய்யும் தொழில்களாக வேட்டைத் தொழிலும், பயிர்த் தொழிலும் பழங்குடி பாரதியின் கவிதைகளில் இடம்பெறுகின்றன.

காணிகள் செய்யும் தொழில்களாக ஒரு ஆதிவாசிப் பெண் தனது காதலனிடம் கூறுவதாக ஒரு கவிதையில் வருகிறது. ஆண்கள் செய்யும் தொழில்களாக.

"போவணும் வேட்டக்கி போவணும்

காட்டுக்குப் போவணும்

வீட்டு செடக்கிணு

பெண்ணுக்கும் ஆணுக்கும்

வெட்டி நடவுக்கும்

காவலு காக்கணும்

சாவுக்கும் சாமிக்கும்

குடுதியும் கொடுக்கணும்" 49

என்ற வரிகளில் வேட்டைத் தொழில், காட்டுத் தொழில் முக்கியமாக இடம் பெறுகின்றன.

"விவசாயப் பாடல்" என்னும் மற்றொரு கவிதையில் காணிகள் செய்யும் தொழில்களாக,

"கர நெல்லும் தெனயும் வெதச்சு செம்பன்

சேனையும் வாழயும் நட்டு

குறுவெட்டி வேலியும் கட்டி

பந்திக்குக் குண்டும் வெட்டி

காத்துக் கெடந்து காவலும் காத்து

ஒருவாரு முசியனும் குறுக்கும் முறியணும்"6

என்பதில் வரும் கரநெல் நீரின்றி மலைப்பகுதிகளில் வறண்ட நிலத்தில் விளைந்து பலன் கொடுக்கும் நெல்வகையாகும். நெல்லுடன் திணை பயிரிடும். செய்தியும், குறுக்கு முறிய பாடுபட்டு பயிர் காக்கும் தொழில்களும் இக்கவிதையில் இடம் பெறுகின்றன.

## உழைப்பு

காணிகள் கடுமையான உழைப்பாளிகள். 'விவசாயப் பாடல்' என்ற கவிதையில் உழைப்பின் அவசியம் கூறப்பட்டுள்ளது. மேலும், காணி தனது உழைப்பு வாழ்க்கையில் குடும்பத்தை எங்ஙனம் கட்டியெழுப்ப வேண்டும் என்பதையும் கூறுகிறது.

"வேக்கரி தின்னணுமெங்கி

நின்ன குறுக்கு முறியணும் குறமா

பட்டினி மாறணுமெங்கி - வெளயி

வெட்டி நடணுமிடே குறுமா

வெட்டோத்தி ஆக்கத்தி கொண்டு - காடு

வெட்டி தெளிச்சணும் குறுமா - பின்ன

குனிஞ்சி வேல செய்ய மடியா - நீ

வேக்கரி தீன்னோரும் தடியா - பின்ன

பெண்ணின் கெட்டி மக்கள் ஒண்டாக்கி

பட்டினி கெடக்கேரும் குருமா - எந்நும்

சோப்ப காட்டேரும் குறுமா - தர

மடியனாயிக்கூடம் குறுமா

காலத்த உச்சக்கி வையிட்டும் - நீ

நம்மாட்டி வெட்டணும் குறுமா"7

என்று உழைப்பின் அருமையைப் பேசுகிறது.

## சமூகம்

காணி சமூகம் காட்டை மையமாகக் கொண்டது. காடு அவர்களுக்குச் சொந்தமானது என்பதைக் கூறுகிறது. 'முத்தனும் மூத்தப்பனும்' என்ற கவிதை,

"முத்தனும், மூத்தப்பனும்

முப்பாட்டனும் மூப்பறியா காலந்தொட்டு

நடந்து அளந்த அடவி

மொளயும், ஈற்றயிம் தருவப்படப்பும்

அடவிக்காடும் வெட்டி

கைகொண்டு இழுத்து மாறி

இடம் வலம் தெளிச்சு

குடிகெட்டிய காணிக்குடி கெட்டிய

கவல நெடுவன் நீறா எந்நொள்ள கெயங்கும்

சேனயும் சேம்பும் காச்சிலியும் நட்டு

மென்சினியும் வாழயும் கெர நெல்லும்

சளங்கயும் நட்டு பிடிச்ச

தூணனும் ஊழியும் குப்பணியி குறுமரும்

மூட்டுகாணி விளிகாணி பிலாத்தியும்

பாட்டப்பெரயி ஒந்நுகூடி தற்பங்கு வெச்சு

வெட்டி நடவு நடத்திய

காடு நமக்குள்ளது

மூத்தப்பங்காலத்தொட்டு

காடு நமக்குள்ளது"[8]

என்பதில் காணி மக்களின் சமூக வாழ்க்கை குறிப்பிடப்பட்டுள்ளது. மூட்டுக்காணி, விளிகாணி, பிலாத்தி என்னும் சமூகப் பெரியவர்களின் உறவுகள் இக்கவிதையில் வருகிறது.

## காவல்

விவசாயப் பயிரைக் 'காத்துக்கெடத்து காவலும் காத்து ஒருவாடு முசியனும்' என்று விவசாயப்பாடல் கவிதையில் கூறும் பழங்குடி பாரதி தெக்கப்பாட்டு கவிதையில் 'வெட்டி நடவுக்கும் காவலு காக்கணும்' என்கிறார்.

பயிர்களின் மீதான காவல் என்பது உழைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். அதனை வலியுறுத்தும் பழங்குடி பாரதியின் கவிதைகள் காணிகளின் சமூக வாழ்வியலை எழுத்தாக்குகிறது.

## முடிவுரை

குமரிமாவட்டத்தில் பல கவிதைகள் தோன்றினாலும் பழங்குடி பாரதியின் கவிதைகளுக்குத் தனிச் சிறப்பு உண்டு. ஆதிவாசிகளான காணி இன பழங்குடியினரின் வாழ்க்கை முறைகள்

இக்கட்டுரையில் சிறப்பாக பேசப்பட்டுள்ளது. அம்மக்களின் தொழில்கள், அவர்களது உழைப்பு அனைத்தும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

## References

Muthanum Muthappanum, Pazhangudi Bharathi, (Page – 52)

Nekku Pattu, Pazhangudi Bharathi, (Page – 46)

Neyili, Pazhangudi Bharathi, (Page – 45)

Vivasaya Padal, Pazhangudi Bharathi, (Page – 50)

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License